**அந்தரங்கமானது**

**09/ GIT/ INS/ PR/01**

எனது எண்: DOE/9/2/2/GIT/2026

பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.
2026 ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**பொதுத் தகவல் தொழில்நுட்பப் (GIT) பரீட்சை – 2026**

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரல்**

குறித்த பரீட்சை 2026.10.24 ஆம் திகதி நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டினை விரைவாக நடாத்தி பெறுபேற்றை வழங்க இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இத்தேசியப் பணியை வெற்றிகரமாக நடத்துவதற்கு தங்களது பாடசாலை ஆசிரியர்களை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக விண்ணப்பிக்குமாறு கூறுவதோடு விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்திற்கு முன்பு பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மிக மேலானதாகக் கருதுகிறேன்.

இதற்காக கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பாக தங்களது அவதானத்தைச் செலுத்துமாறு தயவுடன் கேட்டு கொள்கின்றேன்.

1. விண்ணப்பப்படிவங்கள் கோருவதற்கு நிகழ்நிலை முறையை மாத்திரம் பயன்படுத்துவதோடு 2026.10.01 தொடக்கம் 2026.10.14 ஆம் திகதி வரை www.doenets.lk எனும் இணைய முகவரி மூலமோ அல்லது www.onlineexams.gov.lk எனும் முகவரியிலோ நிகழ்நிலையில் அனுப்ப வேண்டும். (2026.10.14 இற்கு பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.) விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதற்கு எதிர்பார்க்கும் சகல ஆசிரியர்களும் நிகழ்நிலையில் மாத்திரம் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும்.
2. நிகழ்நிலை முறையில் பூரணப்படுத்திய தரம் 10 **தொடக்கம்** 13 வரையான நேர அட்டவணை சரியானது என தாங்கள் அல்லது பிரதி அதிபர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
3. விண்ணப்பப்படிவத்தின் சகல பகுதிகளுக்கும் உரிய தகவல்களை சரியாக நிரப்புமாறு ஆசிரியர்களுக்கு விசேடமாக அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.
4. அவ்வாறு விண்ணப்பித்த சரியான தகவல்களடங்கிய விண்ணப்பப்படிவங்களை மாத்திரம் தாங்கள் மதிப்பீட்டுப் பணிக்காக சான்றுபடுத்த வேண்டும்.

❖ மிக முக்கியமானது

5. விண்ணப்பப்படிவத்தில் நிகழ்நிலையில் உறுதிப்படுத்தவேண்டிய பகுதிகளை சரியாகப் பூரணப்படுத்தி, அவ்வுறுதிப்படுத்தலை நிகழ்நிலை முறையில் (Online) பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது தங்களது கடமையாகும். இதற்காக www.onlineexams.gov.lk இணைப்பின் (link) ஊடாக பரீட்சைத் திணைக்களம் மூலம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர்பெயர் (User Name), கடவுச்சொல் (Password) என்பவற்றை உள்நுழைத்து முறைமையினுள்

பிரவேசிக்க வேண்டும். பிரவேசித்த பின்பு காட்சிப்படுத்தப்பட்ட "GIT Examinations - 2026 - Marking Examiners Verifications" என்பதை தெரிவுசெய்ய வேண்டும். இங்கு மதிப்பீட்டுப் பணிக்காக விண்ணப்பித்துள்ள தங்களது பாடசாலைப் பரீட்சகர்களின் பெயர்ப்பட்டியல் காண்பிக்கப்படுவதோடு, Edit பொத்தான் (Button) ஐப் பயன்படுத்தி உரிய உறுதிப்படுத்தலை வழங்கி Submit பொத்தானைப் பயன்படுத்தி அத்தரவினை முறைமைக்குள் அனுப்ப வேண்டும். (ஒவ்வொரு பரீட்சகரும் வேறுவேறாக உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.) அவ்வாறு தாங்கள் உறுதிப்படுத்திய பின்பு Principal's Certificate பொத்தானைப் பயன்படுத்தி சாராம்ச அறிக்கையை பதிவிறக்கம் (Download) செய்ய வேண்டும்.

6. பதிவிறக்கம் செய்து அச்சுப்பிரதி செய்யப்பட்ட சாராம்ச அறிக்கை (Summary PDF) உறுதிப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பதாரிகளினதும் தகவல்களை சரியாக உள்ளிட்டு பரீட்சித்த பின்பு (இது சரியாக பரீட்சிக்கப்படாதவிடத்து ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டுப் பணி கிடைக்காது விடலாம்.) அவ்வாறு சான்றுப்படுத்திய விவரத்தை தேவையான சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்ற வகையில் பாடசாலைக் கோப்பில் சேமித்து வைக்கவும். **புதிய விண்ணப்பதாரிகளின் வன்பிரதிகள் மாத்திரம்** (Hard Copies) உரிய தகமைகளை உறுதிப்படுத்திய சான்றிதழ்களோடு (நியமணக் கடிதம், கல்விச் சான்றிதழ்கள்) இணைத்து 2026.10.14 இற்கு முன்பு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. 1503,
கொழும்பு.

(சகல கடித உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் "விடைத்தாள் மதிப்பீட்டுப் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் **பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை (GIT) - 2026**" எனக் குறிப்பிடல் வேண்டும்.)

**மேலதிக தொடர்புகளுக்கு**

| | | | |
|---|---|---|---|
| 011 2784037 | திரு. P.R. தேவபந்து | பரீட்சை ஆணையாளர் | பா.ப. மதிப்பீடு |
| 011 2785633 | திருமதி. C. கிருஷ்ணகோபி | பிரதிப் பரீட்சை ஆணையாளர் | பா.ப. மதிப்பீடு |
| 011 2785216 | திருமதி. H.T.C.D.P. சிறிவர்தன | பிரதிப் பரீட்சை ஆணையாளர் | பா.ப. மதிப்பீடு |
| 011 2785644 | திரு. G.P.S.A.A ஜயதிலக | பிரதிப் பரீட்சை ஆணையாளர் | பா.ப. மதிப்பீடு |
| 011 2785662 | திரு. M.W.S.C. வீரசிங்க | உதவிப் பரீட்சை ஆணையாளர் | பா.ப. மதிப்பீடு |
| 011 2785231/ 011 2785681 | பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை | | |

**தொழில்நுட்ப உதவிகளுக்கு**

நிகழ்நிலை கிளை - 011 2786343/ 011 3671568/ 011 3661122

**P.R. தேவபந்து**
பரீட்சை ஆணையாளர்
பாடசாலைப் பரீட்சை மதிப்பீடு

**ஒப்பம்: A.K.S. இந்திகா குமாரி லியனகே**
பரீட்சை ஆணையாளர் நாயகம்